


விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் செஞ்சி பணிமனை தொ.மு.ச. சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், லூர்து இமானுவேல், அரிகிருஷ்ணன், தியாகராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### கடலூர் மேற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர்

# வழக்கறிஞர் க.ரகுநாதன் தந்தை அ.கருப்புசாமி படத்திறப்பு!

### மாவட்டச் செயலாளர்-முன்னாள் அமைச்சர் சி.வெ. கணேசன் எம்.எல்.ஏ., திறந்து வைக்கிறார்!

கடலூர், ஜூன் 7-

கடலூர் மேற்கு மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கோ.கொத்தனூர் கிளைக் கழக செயலாளர் வழக்கறிஞர் க.ரகுநாதன் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் க.அமிர்தலிங்கம் முன்னாள் நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் க. துளசி மணி பொறியாளர் க. சபாபதி ஆகியோரின் தந்தை



அ. கருப்புசாமி அவர்கள் கடந்த 26.05.2026 அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அதனையொட்டி எங்களின் தந்தையார் அ. கருப்புசாமி அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி 10.06.2026 புதன்கிழமை பிற்பகல் 12 மணி அளவில் வேப்பூர் வட்டம் கோ. கொத்தனூரில் உள்ள எங்களது "அ.கருப்புசாமி அஞ்சலை அறிவாலயத்தில்" நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி. வெ.கணேசன் அவர்கள் கலந்து கொண்டு எங்களின் தந்தையாரின் படத்தை திறந்து வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர் கழக, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் , கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்தொ.மு.ச நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

# சட்ட ஒழுங்கு சீர்கேட்டால் தமிழ்நாடு சீரழிந்து கொண்டுள்ளது!

### 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூன் 7-

சட்டம் ஒழுங்கு சீர்கேட்டால் த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாடு சீரழிந்து கொண்டுள்ளது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் த.வெ.க. அரசு கடந்த மே 10ம் தேதி ஆட்சி பொறுப்பேற்றது. தேர்தலுக்கு முன் தி.மு.க.வை கடுமையாக விமர்சித்த விஜய், அந்த கட்சியோடு கூட்டணி அமைத்து, வெற்றி பெற்ற கட்சிகளோடு சேர்ந்துதான் ஆட்சி நடத்தி கொண்டிருக்கிறார். இது போக, அமைச்சர் ஆசை காட்டி, அ.தி.மு.க.விலும் சலசலப்பை உருவாக்கி னார். அவரது பேச்சை நம்பி த.வெ.க. அரசுக்கு அதிருப்தி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சிலர் ஆதரவு அளித்தனர். எதிர்பார்த்தபடி அமைச்சர் பதவியை யாருக்கும் தரவில்லை. இப்படியாக, தி.மு.க.கூட்டணியிலும், அ.தி.மு.க.யிலும் 'அரசியல் வினையாட்டு' நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மிகப்பெரிய அளவில் சீரழிந்துக் கொண்டிருக்கிறது.



தினகரன்

ஜூன் 6, 2026 சனிக்கிழமை

**நீங்கள்தான் முதல்வர்...!**

தமிழ்நாட்டில் தவெக அரசு கடந்த மே 10ம் தேதி ஆட்சி பொறுப்பேற்றது. தேர்தலுக்கு முன் திமுகவை கடுமையாக விமர்சித்த விஜய், அந்த கட்சியோடு கூட்டணி அமைத்து, வெற்றி பெற்ற கட்சிகளோடு சேர்ந்துதான் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார். இதுபோக, அமைச்சர் ஆசை காட்டி, அதிமுகவிலும் சலசலப்பை உருவாக்கினார். அவரது பேச்சை நம்பி தவெக அரசுக்கு அதிருப்தி அதிமுக எம்எல்ஏக்கள் சிலர் ஆதரவு அளித்தனர். எதிர்பார்த்தபடி அமைச்சர் பதவியை யாருக்கும் தரவில்லை. இப்படியாக, திமுக

குழந்தைகள், பெண்கள் மீதான பாதுகாப்பை உறுதி செய்யும் சிங்கப்பெண் அதிரடிப் படை திட்டத்திற்கு, ஆட்சிக்கு வந்த முதல்நாளே கையெழுத்திட்டார் முதல்வர் விஜய். ஆனால், தமிழ்நாட்டில் தினந்தோறும் பாலியல் குற்றங்கள் நடந்தவண்ணம் உள்ளன. கோவையில் 10 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலையானது பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. நடைப்பயிற்சி சென்ற மூதாட்டி உட்பட இரண்டரை வயது சிறுமி வரை, பாலியல் சீண்டல்க ளுக்கு உள்ளாகி வருகின்றனர். விஜய் போட்டியிட்ட திருச்சி கிழக்கு தொகுதியிலே பாலியல் பலாத்காரம் சம்பவம் நிகழ்ந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

18 வயதிற்குட்பட்ட சிறுமிகளை பாருக்குள் அனுமதித்தது, அங்கு வந்த 2 இளம் பெண்களை கார் ஏற்றிக் கொலை செய்தது. நேற்று கூட திருப் புத்தூர் அருகே 10ம் வகுப்பு மாணவன் கழுத்தறுத்து கொலை என கடந்த 25 நாட்களில் 25க்கும் மேற்பட்ட கொலை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. வழிப்பறி, கொள்ளை சம்பவங்களும் அதிகரித் துள்ளன. மேலும், தவெக பிரமுகர் அரசு பஸ் டிரைவர் மீது கும்பலாக சேர்ந்து, கொலைவெறி தாக்குதல் நிகழ்த்திய சம்பவங்களும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தமிழகத்தில் நடக்கும் இத்தனை குற்றச்சம்ப வங்கள் முதல்வரின் கவனத்திற்கு செல்கின்றனவா என தெரியவில்லை. உங்களுக்கு அண்ணனாக, தம்பியாக என பிரசாரத்தில் பெண்கள் பாதுகாப்பு குறித்து கவலைப்பட்ட விஜய், முதல்வரானதும் அமைதி காப்பதன் மர்மம் புரியவில்லை, இதை யெல்லாம் விட கொடுமையாக திருச்சியில் நடந்த நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பேசிய முதல்வர் விஜய், யார் ஆட்சியிலோ இந்த கொடுமைகள் நடப்பதாக எண்ணி பேசிவிட்டு சென்றது, நன்றி கூறும் கூட்டத்தில் பிரசார பாணியில் பேசியதும் மக்களை பெரியதாக கவரவில்லை.

விவசாயக்கடன் தள்ளுபடி என அறிவித்தது த.வெ.க. அரசு. முழுமையாக தள்ளுபடி செய்யாமல், கண் துடைப்பாக செய்ததாக கூறி, தமிழகமெங்கும் விவசாயிகள் இதனை எதிர்த்து போராடி வருகின்றனர். த.வெ.க. கட்சி வேட்பாளரே இதை எதிர்த்து பேசினார். இவையெல்லாம் அரசின் கவனத்திற்கு செல்கிறதா? மூடப்படுவதாக அறிவித்த டாஸ்மாக் கடைகள் மீண்டும் செயல்படுகின்றன.

தேர்தல் பிரச்சாரத்தில் வெறும் ரீல்ஸ்களாக போட்டு பிரசாரம் செய்தீர்கள்... அது முடிந்து ரியலாக இப்போது ஆட்சியில் அமர்ந்தும் விட்டீர் கள். நீங்கள்தான் முதல்வர். இனி யாரையும் குறை கூறி பயனில்லை. சீரழிந்து கிடக்கும் சட்டம், ஒழுங்கை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். மாற்றம் தேவை என வாக்க ளித்த மக்களை, ஏமாற்றாதீர்கள். இனி யாவது. பிற கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்படுத்தும் தேர்தல் அரசியலில் ஈடுபடாமல், உங்களை நீங்களே கூறிக்கொள்ளும் 'தூய சக்தியாக', மக்களுக்கான அரசியல் சக்தியாக செயல்பட தொடங்குங்கள் என்பது தான் மக்களின் வலியுறுத்தல்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நேற்று தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருவரங்கம் தேவி தியேட்டர் எதிரில், நாகப்பிள்ளை மண்டபம வாசலில், அன்னதானம் நடைபெற்றது. இந்நிகழ்வினை திருவரங்கம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பழனியாண்டி அன்னதானத்தை தொடங்கி வைத்தார். கழகத்தினர் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம்.ஏ. சண்முகம்**

**ஜூன் 6 (1984)**



**புதுச்சேரி மாநிலக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் – புதுச்சேரி மாநில வீட்டு வசதி வாரியத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகத் தலைவர் கலைஞரிடத்தில் உரிமையோடு பேசக் கூடியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் மிசா சட்டத்திலும் சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# எப்போது மணக்கும் கிண்டி இருக்கும் திசையில்?

### 'கணையாழி' தலையங்கம்!





"எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும் தமிழணங்கே"
மனோன்மணீயம் சுந்தரனாரின்
தமிழ்த் தெய்வப் பாடல் வரிகள்!
முத்தமிழ் அறிஞர் கலைஞர்
முதல் தடவை
முதலமைச்சராக இருந்தபோது,
மார்ச் 1970இல்
திரைப்படத்துறை பரிசளிப்பு விழாவில்
அறிவித்த
தமிழ்த்தாய் வாழ்த்தின் பாடல் வரிகள்!
தமிழ்த் தெய்வத்தைத்
தாயாக மாற்றித்
தமிழ்த் தெய்வ வணக்கத்தைத்
தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்தார்!
தமிழில் பாடிய மேடை
'தீட்டாயிடுத்து' என்றும்
கச்சேரிகளில் 'துக்கடா' என்றும்
சிலர் கருதியிருந்த
தமிழைத்
தெய்வம் என்றார் சுந்தரனார்.
தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களும்
கொண்டாடும் வகையில்
தாய் என்றார் கலைஞர்!
தாய்மொழி எதுவாக இருப்பினும்
தமிழ்த்தாயை வாழ்த்துங்கள் என்று,
தாய்மொழி வாழ்த்து என்றில்லாமல்
தமிழ்த்தாய் வாழ்த்து என்றார்
முத்தமிழ் அறிஞர்!
அப்போதும்
"தமிழ் தெய்வமில்லை;
குட்டித் தேவதை" என்றார்கள்!
'ஓம்', 'மந்திரம்',
ஒலி, மொழி தெய்வம் என்றவர்களே,
கடவுள் வாழ்த்துக்குப் பதில்
மொழி வாழ்த்தா? என்றார்கள்!
அப்போது
பாவேந்தருக்கும் உடன்பாடில்லை.
தாயுமானவர் பாடலையோ,
திருக்குறள் கடவுள் வாழ்த்தையோ
தமிழ்த்தாய் வாழ்த்தாக்கலாம் என்று
புலவர்குழு கூடத்
தீர்மானம் போட்டிருக்கிறது.
தாயுமானவர் பாடலில்
மதச்சார்பு இருக்கிறது.
திருக்குறள் கடவுள் வாழ்த்தில்
'தாள்', 'அடி' இருக்கின்றன.
எந்த மதச்சார்பும் இல்லாமல்
பொதுவாக இருக்கிறது
மனோன்மணீயப் பாடல் என்பதோடு,

மற்றவர்கள் மனம் வாடக் கூடாதென்று
"ஆரியம்போல் உலக வழக்கு
அழிந்து ஒழியா"
என்ற வரியையும்
வாழ்த்தில் வசை வேண்டாம் என்று
நீக்கச் செய்தவர் கலைஞர்!
"பிறப்பொக்கும்" எனத் தொடங்கும்
கலைஞர் அவர்களின்
செம்மொழி மாநாட்டுப் பாடல்,
செம்மொழி வாழ்த்துப் பாடலாக
உலகத் தமிழர்களிடம்
ஒலித்துக் கொண்டிருக்கிறது!
அப்போதும்
"நீச மொழி வாழ்த்திற்கு
மரியாதையா?" என,
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
எழுந்து நிற்க
மனம் இல்லாதவர்களையும்
ஆணையிட்டு எழுந்து நிற்க வைத்தார்
மாண்புமிகு முன்னாள் முதல்வர்
மு.க. ஸ்டாலின் அவர்கள்!
திராவிட மொழிகளின் தாய் என்று
போற்றப்படும் தமிழ்
இப்போது
ஈழத் தமிழர்களால்
உலக மொழிகளின் தோழியாக
ஆகியிருக்கிறது!
ஆனால் தமிழ்நாட்டில்
முதலிடத்தில் இருந்த,
இருக்க வேண்டிய
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
மூன்றாம் இடம்!
வந்தே மாதரம் பாடலுக்கு
முதலிடம்!
முதல் இரண்டு சரணங்கள்
சமஸ்கிருதச் சொற்கள்!

பின்வரும் பகுதி
வங்காள மொழியில்!
கேட்டால் சொல்கிறார்கள்,
"வந்தே மாதரம் தேசியப் பாடல்" என்று!
வந்தே மாதரம்
விடுதலைப் போராட்டக் காலத்து
தேசிய ஒற்றுமையின் அடையாளம் என்று
சொல்லியிருக்கிறார் பாரதியார்!
தாயை வணங்கும்
வந்தே மாதரம் சரியில்லை
வந்தே பிதரம் –
தந்தைய வணங்குகிறேன்.
தந்தை என்பது ஆங்கில அரசு என்று
கொச்சி சமஸ்தானத்தில்
திவான் பேஷ்கார் வேலை பார்த்த
எ. சங்கரய்யா என்பவர் அப்போதே
இந்தியா பத்திரிகைக்கு (8/6/1907)
கடிதம் எழுதியிருக்கிறார்.
1907இல் வந்தே மாதரம்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
மொழிபெயர்த்தவர் பாரதியார்!
பாரதியார் இருமுறை
மொழிபெயர்த்திருக்கிறார்!
இந்தியா இதழில் (18.05.1907)
இராக, தாளக் குறிப்புகள் இல்லாமல்
வெளிவந்துள்ளது
முதல் மொழிபெயர்ப்பு!
'முன்னொருமுறை முழுதும் அகவலாக
ஓர் மொழிபெயர்ப்பு எழுதியிருந்தேன்;
ஆனால் அது
பாடுவதற்கு நயப்படாததாகையால்,
இப்போது பல சந்தங்கள் தழுவி
மொழிபெயர்க்கப்பட்டுள்ளது"
எனும் ஆசிரியர் குறிப்புடன்,
'ஜாதீய கீதம்' எனும் தலைப்பில்.
இந்தியா இதழில் (13.03.1909)
வெளிவந்துள்ளது
இரண்டாவது மொழிபெயர்ப்பு!
"ஆலயம் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம்
தேவி இங்குனதே"
என்றும்,
"பத்துப் படைகொள்ளும் பார்வதி தேவியும்,
கமல இதழ்களில்
களித்திடும் கமலையும்,
அறிவினை அருளும்
வாணியும் அன்னை நீ" என்றும்,
பாரதியின் மொழிபெயர்ப்பில்
இடம்பெற்றிருக்கின்றன!
(சீனி விவிசுவநாதன்,
காலவரிசையில் பாரதி படைப்புகள்)

ஒரு மதச்சார்பில்லா
அரசு நிகழ்ச்சிகளில்,
எந்த மதச்சார்பும் இல்லாத
தமிழ்த்தாய் வாழ்த்துக்கு
இப்போது மூன்றாவது இடம்!
அனைத்து உலகும் இன்பமுற,
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும்
தமிழணங்கின் புகழ்
எப்போது மணக்கும்
கிண்டி இருக்கும் திசையில்?



**அன்புடன்**
**ம.ரா.**

நன்றி: **கணையாழி**
ஜூன் 2026